Rural Man Power Programme.

*307. *Q.*—THIRU N. DENNIS :—Will the Hon. the Minister for Local Administration be pleased to state the number of Panchayat Unions in Kanyakumari district where Rural Man Power Programme is now being implemented ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஊரக மனித சக்தித் திட்டம் தற்பொழுது கன்னியாகுமரி மாவட்டத்தில் இராசாக்க மங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் வேலை இல்லாதவர்கள் அதிகம் இருக்கும் இடமாக இருக்கிறது. அங்கே வறட்சியும் அதிகமாக இருக்கிறது. அதை உணர்ந்து, அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தப் பகுதியில் ரூரல் மேன் பவர் ப்ரொக்கிராம் செயல்படுத்தவேண்டுமென்று சிபார்சு செய்தார்கள். ஆகவே, கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் ரூரல் மேன் பவர் ப்ரோக்கிராம் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்படிப்பட்ட வேலைகள் எடுத்துக் கொள்வதாக இல்லை. ஆகவே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இராசாக்க மங்கலத்தில் முன்னாலேயே வேலை நடந்து வருகிறது.

Applied Nutrition Programme.

* 308. *Q.*—THIRU N. DENNIS :—Will the Hon. the Minister for Local Administration be pleased to state the number of Panchayat Union areas in Kanyakumari district where Applied Nutrition Programme is implemented ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : ஊட்டச் சத்துணவு திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலை ஊராட்சி ஒன்றியத்தில் 1973-74-ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியன் பகுதி ஏழைகள் மிகுந்த இடமாக இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக கிள்ளியூரில் செயல்படுத்த முடியும். அதை உணர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் கிள்ளியூர் ஏரியாவை அப்ளைடு நியூட்டிரிஷன் ப்ரொக்கிராமில் செயல்படுத்தவேண்டுமென்று சில காலத்திற்கு முன்னால் சிபார்சு செய்தார்கள். ஆகவே, கிள்ளியூரில் அந்தத் திட்டத்தை அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : அப்படி ஒன்றும் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து வந்ததாகத் தெரியவில்லை, வந்தால் அது பற்றி யோசிக்கப்படும்.